# மேற்கே செல்லும் விமானம் 2

மோகன் கிருட்டிணமூர்த்தி



பாகம் இரண்டு

Copyright (c) 2015 Mohan Krishnamurthy. All rights reserved.

No part of this book can be copied, distributed, reproduced or transmitted in any form or means including photocopying, mechanical, electronic, recording or otherwise without the prior written permission from the author. This book is licensed only for your personal use, not meant to be resold.

Originally written in August 2006. Published in 2015 for eBooks publishing platforms. Please contact at leomohan@yahoo.com for feedback and review.

Cover page image courtesy: http://www.pixabay.com bound by Creative commons Deed CC0. Thanks to the original artist.

# 1

செல்லியம்மன் சிலையாகி மூன்று மாதங்கள் இருக்கும்.

ராஜின் வீட்டிலிருந்து "அந்த பொண்ணைப் போய் பாருடா" என்று பல தடவை சொல்லிவிட்டார்கள் அவன் அப்பாவும் அம்மாவும். "வேலை அதிகமா இருக்கு" என்ற மழுப்பிக் கொண்டிருந்தான்.

ஒரு படி மேலே போய் சிலியாவிற்கே போன் செய்து பேசினர் அவன் பெற்றோர். தான் ஒரு கல்லூரியில் லெக்சரர் ஃபார் ரிலீஜியஸ் ஸ்டிடீஸ் வேலைக்கு சேர்ந்துவிட்டதாகவும் அது நெவார்க் நகரத்தில் இருப்பதால் ராஜை சந்திக்க முடியவில்லை என்றும் கூறினாள். தான் இந்து மதத்தைப்பற்றி இங்கு அமெரிக்கர்களுக்கு போதிப்பதாகவும் கூறியதை கேட்டு அவன் பெற்றோர் மிகவும் மகிழ்ச்சியடைந்தனர்.

அவன் நண்பர்களும் மாற்றி மாற்றி இமெயிலில் சிலியாவைப் பற்றியே கேட்டுக் கொண்டிருந்தனர்.

ராஜா மாதிரி இருந்த ராஜ் மிகவும் சோர்வடைந்து காணப்பட்டான். அவனால் சிலியாவைவிட்டு இருக்க முடியவில்லை. அவன் செய்த தவறுகள் அவனை துண்டு துண்டாக ஆக்கியிருந்தன.

ஆனால் அவன் மேலும் மேலும் தவறான பாதையில் போகவில்லை. அடிக்கடி நாரியை சந்தித்தாலும் அவன் அவனாகவே இருந்தான்.
இன்னும் அதிக ஆன்மீகத்தையும் தெய்வ பக்தியையும் நாடினான்.

எப்போதாவது அவளுக்கு வந்த கடிதங்களை எடுத்துக் கொண்டு அவள் வீட்டிற்கு சென்று வருவான்.

அப்போதெல்லாம் மணக்கும் ஒரு தென்னிந்திய காப்பி கொடுத்து 'ஹலோ ஹாயுடன்' வழியனுப்பி விடுவாள் சிலியா.

அவனால் மறுபடியும் அந்த பேச்சை எடுக்க முடியவில்லை. அவளோ அது மாதிரி எதுவும் நடக்காதது போல நடந்துக் கொண்டாள்.

திடீரென்று இந்து மதத்தை பற்றி ஏதாவது கேட்பாள். அவள் ராஜூ சொன்னதை மறக்கவில்லை. "நான் 10 சதவிகிதம் தான். ராஜகோபாலைக் கேட்டால் 4 மணி நேரம் பேசுவான்".

ஒரு முறை கர்ணன் துரியோதனனின் மடியை இழுத்ததுபற்றியும் அதைக் கண்ட துரியோதனன் ஒன்றுமே நடக்காதது போல் இருந்ததைப்பற்றி பேச்சு வந்தது.

இது தான் சந்தர்ப்பம் என்று நினைத்து தன் கருத்தக்களின் ஊடே தன்னுடைய சொந்தக் கதையும் சொல்ல நினைத்தான்.

"சிலியா, ஒரு நட்பு என்பது ஆழமான நம்பிக்கையின் அடிப்படையில் தொடங்குகிறது. ஒரு நிலையில் நட்பு 'நட்பு' என்ற இலக்கணத்தையும் மீறி ஒரு வெறித்தனமான நம்பிக்கை, பக்தி, பாசமாக மாறுகிறது. ஓதெல்லோவில் நம்பிக்கையின் ஆதாரம் சரியில்லாததால் தான் குழுப்பமே".

"ஒரு வேளை கர்ணன் துரியோதனின் மனைவியுடன் உடல் உறவு கொள்வதை அவன் பார்த்திருந்தால் கூட தன் கண்களில் ஏதோ குழப்பம் வந்துவிட்டது என்று தான் துரியோதனன் நினைத்திருப்பான்".

"ஒருவர் மேல் நம்பிக்கை வைத்தால் அதை காப்பாற்றும் பொறுப்பு இருவருக்கும் உள்ளது".

"ஆனால் அந்த நம்பிக்கை மேல் யார் முதலில் சந்தேகப்படுகிறாரோ அவரே

அந்த நட்பு உடைய காரணமாகிறார்".

"நட்பில் தவறை மன்னிக்கவும் மறக்கவும் வாய்ப்பு இருக்க வேண்டும். தவறு செய்யாத மனிதர்களே இல்லை. நண்பன் நல்லவனா கெட்டவனா தனக்கு பிடித்ததை செய்கிறானா என்று பார்த்து நட்பு வருவது கிடையாது".

"காதலும் நட்பை போலத்தான். காதலுக்கு முக்கியத்துவம் கொடுத்து தன்னுடைய காதலன் மேலோ காதலி மேலோ இருந்த நம்பிக்கை இருக்கும் வரை அவர் செய்யும் தவறை நாம் பாராமுகமாக இருக்க வேண்டும்" என்றான்.

"போதும் ராஜ். நீ எங்கே வருகிறாய் என்று எனக்கு தெரிகிறது. இதை நாம் இத்தோடு நிறுத்திக் கொள்வோம்" என்று விட்டாள் சிலியா.

அவன் ஏக்கத்தோடு அவளைப் பார்த்தான். அவள் பார்வையை விலக்கிக் கொண்டாள். அவளுக்குள்ளும் பெரிய போராட்டம் நடந்துக் கொண்டுத்தான் இருந்தது.

ராமாயணம் போதிக்கும் போதெல்லாம் அமெரிக்க மாணவ மாணவியர்கள் ராமனுக்கு 100 மதிப்பெண் போடும் போதும் 'என் ராமா நீ எங்கிருக்கிறாய்" என்று கேட்டு ஏங்குவாள்.

அவளுடைய வீடு எந்த பிராமணரின் வீட்டுக்கு குறைந்ததில்லை. சிலுவை செல்லியம்மனாக மாறியிருந்தது. பைபிளின் இடத்தை பகவத் கீதை எடுத்துக் கொண்டது. எப்போதுமே புடவையில் காணப்பட்டாள் சிலியா. அவள் சிந்துவாகவே வாழ்கிறாள். ராஜின் தவறுக்காக அவள் தான் கற்றுக் கொண்டு நல்ல புதிய விஷயங்களை மறுக்கவோ மறக்கவோ தயாராக இல்லை.

அவ்வபோது முரளி, கிருஷ்ணன், பாலா, ராஜூ இவர்களுடன் தொலைபேசி மூலம் பேசுவாள். ராஜின் பெற்றோரிடமும் பேசுவாள். 'மாமி மாமா' போய் 'அம்மா அப்பா' என்றே அழைக்க ஆரம்பித்திருந்தாள்.

ஒவ்வொரு சமயம் அவர்களுடன் பேசிய பிறகு பல மணி நேரம் அழுது தீர்த்தாள்.

சட்டென்று ஓடி ராஜின் மடியில் விழ வேண்டும் என்று தோன்றும் அவளுக்கு.

ரீட்டாவும் பல முறை சிலியாவை கேட்டுக் கொண்டாள். 'ராஜ் செய்தது ஒரு பெரிய தவறே இல்லை. அதை மறந்து அவனுடன் சேர்ந்து நல்ல வாழ்க்கை நடத்து' என்று.

ஒரு முறை பல கல்லூரிகளிலிருந்து உலக சமயங்களைப் பற்றி ஒரு மாநாட்டிற்கு சொற்பொழிவாளர்கள் வந்திருந்தனர். சிலியாவுக்கு இந்து மதத்தை பற்றி பேச வாய்ப்பு கிடைத்தது. பல மணி நேரம் தயார் செய்த பிறகும் அவள் அத்தனை பெரிய மாநாட்டில் பேச தயாராக இல்லை.

மறுநாள் சொற்பொழிவு. இரவு 1.30 மணிக்கு ராஜ்-க்கு போன் செய்தாள்.

அவளுடைய தொலைபேசி எண்ணை அவன் பார்த்ததும் உணர்ச்சி பொங்க எழுந்து "சிலியா?" என்றான்.

"ராஜ் என்னை மன்னிக்கனும்".

(சொல் பெண்ணே. உன்னுடைய இந்த அழைப்புக்காக நான் தவமாய் தவமிருந்தேனடி - உள் குரல்).

"பரவாயில்லை சிலியா. சொல்".

"நாளைக்கு ஒரு மாநாடு. என்னால் பேச முடியாது. பயமாய் இருக்கிறது. நீ வந்து பேசினால் நன்றாக இருக்கும்".

"என்ன நாளைக்கேவா?"

"ஆம்".

"எத்தனை மணிக்கு?"

"10.30 - 12.30".

"இரண்டு மணி நேரமா? "

"ஆம்".

"தலைப்பு?"

"இந்து மதமும் பெண்களும்".

"என்ன சிலியா. விளையாடறியா? இது சாதாரண தலைப்பு இல்லை. ரொம்ப காராசாரமான தலைப்பு. அதுக்கு நிறைய தயார் பண்ணனும். இப்ப மணி 2. எப்படி முடியும்? "

"ராஜூ சொன்னானே நீ எந்த தலைப்பிலும் எப்ப வேண்டுமானாலும் பேச முடியும் என்று?"

(பசங்களா என்னைப்பத்தி நல்லாதான சொல்லியிருக்கீங்க).

"ம். சரி. நாம 7 மணிக்கு என் வீட்டில் சந்திப்போம்" என்றுவிட்டு தொலைபேசியை வைத்தான்.

ஒரு குவளை தண்ணீர் குடித்து விட்டு இறைவனை மீண்டும் வணங்கிவிட்டு உறங்கச் சென்றான்.

6 மணிக்கே அவன் வீட்டிற்கு வந்துவிட்டாள். அவளுக்கும் ஏன் என்று காரணம் புரியவில்லை. அவள் உள் மனதிற்கு "6 மணிக்கு ராஜ் என்ன செய்கிறான்" என்று பார்க்கவேண்டும் என்று தோன்றியது போலும்.

கதவு பூட்டாமல் இருந்தது. பல மாதங்களுக்கு பிறகு வருகிறாள். அன்று சென்றவள் தான்.

'நோ ஸ்மோகிங். நோ ஜோக்ஸ்' என்று புதிய பிரின்ட் அவுட் ஒட்டப்பட்டிருந்தது. காலணிகள் வெளியேவும் புதிய நிறத்தில். ஓரத்தில் பகார்டி பாட்டில் ஒன்று தற்கொலை செய்து கொண்டது போல் தொங்கவிட்டிருந்தான். வீடு அவள் முதலில் பார்த்தது போல கருவறையாக மாறியிருந்தது.

அலமாரியின் முன்னே அமர்ந்து அந்த வாலிப விவேகானந்தன் தியானம் செய்துக் கொண்டிருந்தான்.

"மிகவும் அவசரப்பட்டுவிட்டோமோ? ஒரு வாய்ப்பு தந்திருக்கலாமோ? இந்த இனியவனை இழந்து நாம் ஏன் கஷ்டப்படுகிறோம்" என்று பல கேள்விகள் அவளை தாக்கிச் சென்றன.

ரோஜாப்பூவின் நிறத்தில் ஒரு கைத்தறி புடவை அணிந்திருந்தாள். சணலால் செய்த ஒரு கைப்பை. 4-5 கிலோ இடை இழந்திருந்தாள். அவள் கண்களின் கீழ் கருவளையங்கள் அவள் எத்தனை சோகத்தில் இருக்கிறாள் என்று காட்டியது. ஆனால் இயற்கையான அழகை எது என்ன செய்ய முடியும். அவள் இன்னமும் உலக அழகியாகத்தான் இருந்தாள். அந்த வரிசையான பற்கள் பேச வாய் திறக்கும் போது கூட மனிதரை கோமாளியாக்கிவிடும்.

காலணிகளை வெளியே விட்டு இறைவனை வணங்கிவிட்டு உள்ளே சென்று அமர்ந்தாள்.

அவன் ஏன் 7 மணி என்று சொன்னான் என்று அவளுக்கு புரிந்தது. சாதாரணமாக அறை மணி செய்யும் பூஜை ஒரு மணியாகியிருந்தது. விஷ்ணு சகஸ்ரநாமமும் நாராயண பஞ்சட்சரமும் ஹயிகிரி நந்தினியும் அவனுடைய பூஜை பட்டியலில் சேர்ந்திருந்தது.

இருப்பு கொள்ளாமல் அவள் இருந்த அறையை திறந்து உள்ளே சென்றாள். அவள் எடுத்துச் சென்ற சில பொருட்களைத் தவிர்த்து அவளுடைய மற்ற பொருட்கள் அனைத்தும் அங்கேயே வைத்தது வைத்தபடி இருந்தன.

அங்கே சுவரில் 'சிலியா எனும் தாய்க்காக இங்கே ஒரு குழந்தை காத்துக்

கொண்டிருக்கிறது" என்று பெரிய எழுத்தில் பிரின்ட் செய்து ஒட்டப்பட்டிருந்தது. இன்று ஒட்டியது போல் இல்லை. பல நாட்களாக இருக்கும் போலிருக்கிறது.

தாய்க்குப்பின் தாரம். தாரத்திற்கு பின் தாய். என்ன வித்தியாசம் என்றால். முதலில் ஒரு ஆண்மகனை ஈன்றெடுத்த தாய். பிறகு அவன் திருமணம் புரிந்து கொள்ளும் பெண் - தாரம். மீண்டும் அந்த தாரமே அவனுக்கு தாயாகிறாள். ஒரு மனிதன் தன் மனைவியை காலையில் அண்ணனாக இருந்து காக்கிறான். மதியம் தந்தையாக இருந்து அன்பை பொழிகிறான். மாலையில் நல்ல நண்பனாக இருந்து அவளை வழி நடத்துகிறான். அவன் இரவில் மட்டும் அவளுடைய படுக்கையின் நாயகனாகிறான். எந்த ஒரு உறவும் இந்த அடிப்படையில் நடந்தால் அதில் சண்டையேது. சச்சரவு ஏது. விவாகரத்து ஏது?

மனைவியோ தன் கணவனுக்கு மனைவியாக இருக்கும் நேரத்தை விடுத்து மற்ற நேரங்களில் அவன் தாயாகவே இருக்கிறாள். இந்த அன்பின் புனிதத்துவம் ஒரு ஆண்மகனை ஒரு பெண்ணுடன் இறக்கும் வரையில் இருக்கச் செய்கிறது.

அவள் அழகிழந்து போகலாம். வலுவிழந்து போகலாம். அவள் அகோரமாய் ஆகியிருக்கலாம். ஆனால் இந்த உறுவின் தொடக்கத்தில் ஏற்படுத்தப்பட்ட அன்பு ஆதாரமாக அவனுடைய பசுமையான நினைவில் என்றென்றும் கைதாகிவிடுகிறது.

சிலியா அப்பேர்பட்ட ஒரு பாசத்தைத் தான் ராஜின் பெற்றோர்களிடம் கண்டாள். அவன் தந்தை அவன் தாயை 'அம்மா' என்றே அழைப்பதை கண்டாள்.

ஒரு முறை, "மனைவியை அம்மா என்று அழைப்பது சரியா" என்று அவன் தந்தையிடம் கேட்க, அவர் சொன்ன விளக்கம் தான் மேலே கொடுக்கப்பட்டது.

அழுகை அவள் கண்களை பிளந்துக் கொண்டு எரிமலையாக வெளியே வந்தது. நேராக குளியலறைக்கு சென்று கிடைத்த டிஷ்யூ காகிதங்களால் கண்களை மூடிக்கொண்டாள்.

"என் ராமனே நீ என்னை இவ்வளவு நேசிக்கிறாயா? அப்படியென்றால் ஏன் அந்த

தப்பை செய்தாய். உன்னைப்பற்றி நான் தெய்வத்திற்கு மேலாக நினைக்கவில்லையா? நீ ஏன் அப்படிச் செய்தாய்? " என்று வாய்விட்டுக் கேட்டுக் கொண்டாள்.

முகம் துடைத்து வெளியே வந்தவள் ராஜ் தயாராகிவிட்டதைக் கண்டாள். வெள்ளை முழுக்கை சட்டை, நீல நிற கோட், கால் சட்டை பாலீஷ் செய்யப்பட்ட பெல்ட், கருநீல நிற டை, அழகாக இடது கை பாக்கெட்டின் மேல் வைக்கப்பட்ட கைக்குட்டை, பாராசூட் க்ரீம் போட்டு வாரிய தலை, முகத்தில் குளிர் க்ரீம் தடவி சற்றே பான்ட்ஸ் பவுடர் இட்டிருந்தான். இது ஒவ்வொரு தென்னிந்திய ஆணுக்கும் உள்ள பழக்கம் - முகத்திற்கு பவுடர் இடுவது. பார்க்க சினிமா நடிகன் போல் இருந்தான். ஆக்ஸ் எஃப்க்ட் பர்ஃப்யூம்.

"நீ ரொம்ப அழகாக இருக்கே" - என்றாள் நிஜமாக.

"நீ கூட எந்த ஒரு இந்திய பெண்ணையும் தோற்கடிக்கும் அளவிற்கு இருக்கே" - என்றான்.

"நன்றி" என்று சொல்லிவிட்டு உணவு மேஜையின் மேல் அமர்ந்தாள்.

"ஏய், நான் இன்று ஒன்றும் சமைக்கவில்லை" - என்றான் மன்னிப்பு கேட்கும் குரலில்.

அவள் தான் கொண்டுவந்திருந்த உணவு பொட்டலங்களை பிரித்தாள். இடியாப்பம் குருமா. அமெரிக்காவில்.

"வாவ்" என்று ஆவலாக பிரித்து சாப்பிட்டான்.

"நான் ஒன்னு சொல்வேன் நீ பதிலுக்கு எதுவும் சொல்லக்கூடாது" என்று பீடிகை போட்டான்.

"சொல்" என்றாள்.

"இது எங்கம்மா செய்தது போலவே இருக்கு. ரொம்ப நன்றி" என்றான் நாதழுக்க.

மௌனமானாள்.

"சரி, நாம இன்னிக்கு பேசப்போறதை பத்தி கொஞ்சம் யோசிப்போமா" என்றான்.

"ம்".

"என்னுடைய அணுகும் விதம் இன்னிக்கு வித்தியாசமா இருக்கப்போகுது" - அவன் உற்சாகமாக விவரித்தான். நானே இன்னிக்கு விவகாரங்களை கிளப்பிவிடப்போகிறேன். பிறகு நானே அதற்கு இந்து மதம் மூலமாக விடையும் சொல்லப் போகிறேன்.

"இது சரிப்பட்டு வருமா? சாதாரணமாக பேசினாலே விவகாரம் செய்வார்களே?"

"ஆமாம். அதனால நாமே விவகாரத்தை ஆரம்பிப்போம். அப்போது தான் நாம் நினைத்தபடி அவர்களை கேள்வி கேட்க வைத்து நமக்கு தெரிந்த விஷயங்களை சொல்ல முடியும்" என்றான்.

"ஓ. இது நல்ல அணுகுமுறை. புதிதாக வரும் கேள்விகளை சமாளிப்பதை விட இது நல்ல முறை". ("என்ன இருந்தாலும் நீ புத்திசாலிடா ராஜ்" என்று மனதுக்குள் அவள் பாரட்டியதை அவளாலே தடுக்க முடியவில்லை).

"இடியாப்பம் செய்த கைகளுக்கு ஒரு முத்தம் தரலாமா?" என்று சந்தடிசாக்கில் கேட்டான். கடலில் வழி தொலைந்து போனவர்கள் பல மாதங்களுக்கு பிறகு உணவைக் கண்டால் என்ன செய்வார்கள்?

அவனை முறைத்துப் பார்த்தாள்.

"சரி. வேண்டாம். ஒரு விளையாட்டுக்கு தான் கேட்டேன்" என்று வழிந்தான்.

மறுபடியும் அவள் முறைத்தாள்.

"சரி சரி. மதுரையை எரித்த கண்ணகியே என்னை எரிக்காதே" என்றான் சிரித்துக் கொண்டே.

அவள் சகஜமானாள்.

"இந்து மதத்தில் ஆயிரமாயிரம் கதைகள் உண்டு. வேதங்கள் தான் இந்து மதத்தின் ஆதாரம். பிறகு அதற்கு எழுதப்பட்ட உபநிடதங்கள். ராமாயணமும் மகாபாரதங்களும் இரு மகாகாவியங்களே. அதை மதநூலாக யாரும் படிப்பதில்லை. அதிலிருந்து கற்க வேண்டியவைதான் பல விஷயங்கள்".

"இந்துக்கள் மத நூலாக ஆதாரமாக கருதுவது பகவத் கீதையைதான். அதிலிருந்த கருத்துக்களை வைத்து தான் த்வைதம், அத்வைதம், விசிஷ்டா த்வைதம் என்று மூன்று வழிகள். கடைசியாக வந்தது தான் த்வைதம். அதை நிறுவியவர் மத்வாச்சாரியார்".

"இதில் என்ன ஆச்சர்யம் என்றால் இவை மூன்றுமே பகவத் கீதையை அடிப்படையாக கொண்டு அதில் சொல்லப்பட்டுள்ள கருத்துக்களை வைத்தே வித்தியாசமான பார்வையால் ஒரு மத வழியை ஏற்படுத்தினர் ஆதி சங்கரர், ராமானுஜர், மற்றும் மத்வாச்சாரியர். பிறகு ஆழ்வார்களும் நாயண்மார்களும் இன்னும் பல குருமார்களும் மதவழிகளை பாடல்கள் மூலம் பரப்பினர்" என்றான்.

இவையெல்லாம் அவள் முன்பே அறிந்திருந்தாலும் அவன் பேசுவதை கேட்டு லயித்துப் போனாள். "அவன் பேசிக்கொண்டே இருக்கட்டும் நான் கேட்டுக் கொண்டே இருக்கிறேன். அப்படியே இறப்பு வந்துவிட்டால் என்ன" என்று நினைத்தாள்.

"நாம் இன்று சக்தி என்ற பெண் தெய்வத்தை பற்றி பேசுவோம். அர்த்த நாரீஸ்வரர் என்று சிவனே தன் உடலில் பாதியை கொடுத்ததைப் பற்றி பேசுவோம். கதையோ நிஜமோ இது பல்லாயிரகணக்கான வருடங்களுக்கு

முன்பு நடந்தது என்று வைத்துக் கொண்டால் ஆண் பெண் சமத்துவத்தைப் பற்றி அப்போதே பேசியிருக்கிறார்கள்".

"ஏன் 9 அவதாரம் எடுத்த கடவுள் ஒன்று கூட பெண் அவதாரமாக எடுக்கவில்லையே என்று கேள்வி எழுப்புவோம்".

"நாராயணனின் காலைப்பிடித்துவிட்டப்படியே இருக்கும் லட்சுமி அவருக்கு வேலைக்காரியா? பணிப்பெண்ணா? என்று ஒரு பிரச்சனையை கிளப்புவோம்".

"சங்கரரோ மத்வரோ ராமானுஜரோ ஒரு பெண் இல்லையே? ஒரு பெண் ஒரு மதவழியை உண்டாக்கியிருந்தால் இத்தனை பேர் அதன் வழி நடந்திருப்பார்களா என்று ஒரு குண்டைத்தூக்கிப் போடுவோம்".

அவன் கண்களை அகலமாக்கி இடைவிடாது பேசிக் கொண்டிருந்தான்.

இவையாவும் அவள் அறிந்திராதவை. படித்திருந்தும் யோசிக்காதவை. ராஜ் எனும் குருகுலத்தில் இடியாப்பம் எனும் குரு தட்சிணையை வைத்துவிட்டு சிலியா எனும் கிறிஸ்துவ மாணவி சனாதன தர்மம் கற்றுக் கொண்டிருந்தாள்.

அவன் பல மேடைகளை கண்டிருக்கிறான். மதங்களைப்பற்றி ஆராய்ச்சி செய்வதும் படிப்பதும் தான் அவனுடைய பொழுது போக்கு. அவனுக்கு ஒரு பெரிய விஷயமாக படவில்லை. ஆனால் அவளுடன் இருப்பதே ஒரு பெரிய பேறாக கருதினான். கடவுளின் சரணடியில் இருப்பதை போன்று ஒரு இன்பம் ஒரு அமைதி அவனுக்கு.

# 2

9.30 மணிக்கு வண்டி ரட்கர்ஸ் பல்கலைகழகத்தில் வந்து நின்றது. அலுவலகத்திற்கு விடுப்பு சொல்லியிருந்தான். 50 ஏக்கர் பரப்பளவில் ஒரு பல்கலைகழகம். "இடத்திற்கு பஞ்சமா என்ன" என்று நினைத்தான்.

"அதிக கூட்டமில்லை. ஒரு 50-100 பேர் வருவார்களா? ஜமாய்த்துவிடலாம். நானும் மேடையில் பேசி பலகாலம் ஆகிவிட்டது" என்று நினைத்துக் கொண்டான்.

சிலியா நேராக தன் அறைக்கு அழைத்துச் சென்றாள்.
"காபி" என்று கேட்டாள்.

"இந்த ஊரு மெஷின் காப்பியை எவன் குடிப்பான்" என்றான் நக்கலாக.

அவள் டிராவைத் திறந்து நரசுஸ் காபியை எடுத்தாள்.

"ஏய், இது எங்கே கிடைச்சுது உனக்கு?" என்றான் உலக அதிசயத்தை கண்டது போல.

"உன் அப்பா அனுப்பி வெச்சார்".

"ஏய், நீ அவர்களோட தொடர்புல இருக்கியா?"

"ஆம். நான் உன்னை திருமணம் செய்து கொள்ளாவிட்டாலும் அவர் தான் என்

ஃபாதர்-இன்-லா" என்றாள் முகத்தில் எந்த உணர்ச்சியும் இல்லாமல்.

"நிஜமாகவே உனக்கு அவர் மாமனார் ஆவது எப்போது" என்றான் கெஞ்சியபடி.

"வேண்டாம் ராஜ், மறுபடியும் நீ அந்த பேச்சை ஆரம்பிக்காதே! "

"சரி, சரி" என்றான். அவளுடன் இருப்பதற்காக மௌனியாக தயாராகிருந்தான்.

"ரெண்…" என்று ஏதோ சொன்னான்.

"தெரியும். உனக்கு இரண்டு ஷூகர். என்று சொல்லி இரண்டு ஸ்பூன் சக்கரைப் போட்டு ஒரு அழகான டிக்காக்ஷன் காபியை கொடுத்தாள்".
(நீ என் பொண்டாடிதான். இன்னிக்கு இல்லைன்னாலும் என்னிக்காவது)

பிறகு இருவரும் ஒரு பெரிய லாபியைக்கடந்து ஒரு சிறிய அறைக்குள் நுழைந்தனர். சட்டென்று நுழைந்தவனுக்கு திக்கென்றது.
ஒரு 3000 பேர் அமர்ந்திருந்தார்கள். எத்தனை முறை மேடை ஏறினாலும் அவனுக்கு பயம் இருக்கும். அதுதான் தனது சக்தியே என்று அவன் நினைத்தான். சட்டென்று அம்மனை வேண்டிக் கொண்டான்.

இப்போது "இந்து மதமும் அதில் பெண்களின் பங்கும்" என்ற தலைப்பில் செல்வி சிலியா ஜோன்ஸ் பேசுவார் என்று பல்கலை கழகத்தின் முதல்வர் அறிவித்து அமர்ந்தார்.

"அனைவருக்கும் வணக்கம். இது ஒரு கடினமான வேலை எனக்கு. இந்து மதம் ஒரு சமுத்திரம். அதை நான் வெளியாளாக இருந்து பேசுவதை விட எனக்கு அனுமதி தந்தால் என் நண்பர் ராஜகோபாலன் சந்தானத்தை இங்கு பேச அழைக்கிறேன்" என்று கூறி அவள் முதல்வரை பார்த்தாள். அவரும் தலையசைக்கவே "மிஸ்டர் சந்தானம்" என்று அவனை நோக்கி அழைத்தாள்.

மெதுவாக மேடையை நோக்கி சென்றவன் ஹயகிரி நந்தினி நந்தித்த மேதினி என்று மனதுக்குள் சொல்லிக் கொண்டே மேடையை அடைந்தான்.

அழகான அமெரிக்க ஆங்கிலத்தில மெதுவாக பேசத் தொடங்கினான். சில நிமிடங்களில் புகுந்து விளையாட ஆரம்பித்துவிட்டான். இங்கும் அங்கும் நடப்பதும் மைக்கை கையில் எடுத்துக் கொண்டு வந்தவர்களிடம் சென்று கேள்வி கேட்பதும் அவ்வபோது ஸ்பானிஷில் சில வார்த்தைகள் சொல்வதுமாக ராஜ் அங்கே மக்களை வென்றுக் கொண்டிருந்தான். இதற்கு முன் பேசியவர்கள் நின்ற இடத்திலே பேசிவிட்டு சென்றிருந்தனர்.

சபைக்கு இவை மிகவும் புதிதாக இருந்தது. 5 நிமிடத்திற்கு ஒரு முறை கைதட்டியவர்கள் ஓய்ந்து போய் அமைதியாக அவன் பேச்சை கேட்டுக் கொண்டிருந்தனர்.

அவன் பேசும் போது 3000 மாக இருந்த கூட்டம் ஏறி 3500 ஆகியிருந்தது. பல பேர் நின்றுக் கொண்டிருந்தனர். மற்ற வகுப்பு மாணவர்களும் கூட ஆரம்பித்திருந்தனர். அவன் பேசிக் கொண்டே இருந்தான்.

திருவாசகம் விஷ்ணு புராணம் சமஸ்கிருத ஸ்லோக எடுத்துக் காட்டு அதை மீண்டும் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து ஸ்பானிஷில் மொழி பெயர்த்து புரியாத விஷயங்களை கதையுடன் மீண்டும் சொல்லி சொல்லி புரட்சி செய்துக் கொண்டிருந்தான்.

இடையிடையே "டு வி ஹாவ் டைம்" என்று கேட்க யாருமே மறுக்காததைக் கண்டு தொடர்ந்தான். 2 மணி நேரம் 2.30 ஆகி 3 ஆகி 3.30 மணியில் வந்து முடிந்தது. யாரும் மதிய உணவிற்கு கூட போகாமல் கேட்டுக் கொண்டிருந்தனர். சரஸ்வதி அவன் நாக்கில் தாண்டவம் ஆடினாள். பைபிளும் குரானும் பகவத் கீதையின் ஸ்லோகங்களும் அவன் நாக்கிலிருந்து மாறிமாறி வந்தது.

இத்தனைக்கும் அவன் கையில் ஒரு காகிதம் கூட இல்லை. ஒரு குறிப்பு கூட இல்லை.

சிலியாவிடம் "யார் இவன் எப்படி இவனுக்கு உன்னை தெரியும் என்று கேட்காதவர்களே இல்லை. அனைவருக்கும் பிறகு சொல்கிறேன்" என்று

கூறிக்கொண்டிருந்தாள்.

"ஐயாம் ஸாரி ஐ ஹாவ் ஸ்டோலன் சம்படிஸ் டைம்" என்று கூறி வாய்ப்பு அளித்ததற்கு நன்றி கூறி விடைபெற்றான்.

ஒரிரு நிமிடங்கள் அமைதிக்கு மின் விண்ணை பிளக்கும் அளவிற்கு கரகோஷம் எழும்பியது. அனைவரும் எழுந்து நின்று கரகோஷம் எழுப்பினர்.

"Mr. Santhanam has delivered a stunning speech. We consider ourselves lucky enough to be present today. We are grateful to Ceilia for bringing this young man today. Nobody has ever spoken about the great religion Hinduism in such a great details in our university. We have a good insight about your religion, young man, and thanks to your detailed lecture. We look forward to hear more from you again in near future".

என்று பாமாலையை சூட்டினார் முதல்வர்.

அவனுக்கு பசித்தது. அவளுக்கு தெரியும். 12.30 மணி என்றால் அவனுக்கு பசிக்கும் என்று. ஒரு பொட்டலத்தில சாதமும் ஒரு யோகர்ட் பெட்டியும் எடுத்து வைத்திருந்தாள்.

அவளுடைய அறைக்கு சென்றதும் 'எனக்கு பசிக்குது' என்றான் குழந்தைப் போல.

அவள் அவனை இறுக கட்டியணைத்தாள். சுமார் ஒரு வருடத்திற்கு பிறகு முதல் முறையாக. அவனும் அவளை கட்டியணைத்தான். அவள் மெதுவாக தன்னை விடுவித்துக் கொண்டு 'இந்த அணைப்பு உன்னுடைய பேச்சிற்கு மட்டும் தான்' என்று கூறிவிட்டு உணவு பொட்டலத்தை எடுத்து அவன் முன் வைத்தாள்.

அவன் எதுவும் பேசாமல் அதை சாப்பிட்டான்.

திரும்பி வரும் வழியில் இருவரும் பேசவில்லை. அவனுக்கு தலை வலித்தது. கால்களும் வலி எடுத்தன.

"சிலியா, எனக்கு ஒரு சின்ன உதவி?"

"சொல்".

"எனக்கு தலைவலிக்கிறது. தைலம் தேய்த்துவிட முடியுமா?"

"தேய்த்துவிடுகிறேன். ஆனால் நீ .. "

"கமான் சிலியா. வேண்டாம் விட்டு விடு. நீ என்னை ரேபிஸ்ட் மாதிரி நடுத்துவது என் மனதை புண்படுத்துகிறது. உனக்கு என்னை புண்படுத்தாமல் பேசத் தெரியாதா? நீ என்ன நினைக்கிறாய்? நீயாக வந்து என்னைக் கூப்பிட்டாய்? நான் என்றைக்காவது உனக்கு போன் செய்தேனா? உனக்குத் தெரியும் இல்லையா நான் பசி தாங்கமாட்டேன் என்று? அதனால் எனக்கு நிஜமாக தலைவலி. உன்னால் முடியாவிட்டால் நான் ஏதாவது மாத்திரை சாப்பிட்டுவிட்டு தூங்குகிறேன். போ" என்றான்.

அவனை பார்க்கும் போது குழந்தை மதிய உணவு பெட்டியை தொலைத்துவிட்டு அம்மாவிடம் கதை சொல்வது போல இருந்தது அவளுக்கு. பெண் அல்லவா? உருகினாள். மருகினாள.

"சரிப்பா சரி. என்னை மன்னிச்சிக்கோ" என்றாள்.

அவன் ஒன்றும் பேசாமல் வண்டியை விட்டு இறங்கி காலணிகளை அகற்றிவிட்டு கதவை திறந்து கோட்டை வீசி எறிந்துவிட்டு படுக்கையில் சென்று விழுந்தான்.

வண்டியை நிறுத்திவிட்டு உள்ளே வந்த அவள் முகம் கை கால் அலம்பிவிட்டு இறைவன் முன் சென்று வணங்கிவிட்டு அவன் டிராவிலிருந்து அவன் இந்தியாவிலிருந்து கொண்டு வந்திருந்த அமிர்தாஜன் பாட்டிலை எடுத்து வந்து அவனருகில் அமர்ந்தாள்.

"குழந்தை, டை பெல்ட் அவிழ்க்காமல் படுத்துவிட்டது பார்" என்று மனதில்

கொஞ்சியபடியே அவன் அருகில் சென்று குனிந்து அவனுடைய டையை கழற்றினாள். அவளுடைய கூந்தல் அவன் மேல் விழுந்து அவனை திக்முக்காட செய்தது. "வேண்டாம் ராஜ் இன்னொரு தப்பு செய்தால் அவள் உன்னை கொன்றே விடுவாள்" என்று சொல்லிக் கொண்டான்.

(அடக்கு அடக்கு)

பிறகு அவன் அங்கியை தளர்த்தினாள். அவனுடைய கேசத்தை பின்னுக்கு தள்ளி அவன் தலையில் தைலம் தடவினாள். அவன் அமைதியடைந்திருந்தான். அவளுக்கு அவனுடைய உடலின் சூடு ஆறுதல் அளித்தது. அவளுக்கு இன்னும் அது தேவைப்பட்டது.
எத்தனை நிமிடங்கள் என்று தெரியாது அவள் அவன் தலையை பிடித்துக் கொண்டிருந்தாள். அவன் உறங்கியிருந்தான்.

அவனுடைய உணர்ச்சிகளைக் கரைபுரள செய்ய இன்று உள்ளே எந்த அரக்கனும் இல்லை.

அவள் தன்னிலை இழந்துக் கொண்டிருந்தாள். அவளும் களைத்திருந்தாள். அவனருகிலே அப்படியே படுத்து உறங்கிவிட்டாள்.

# 3

கண்விழித்த போது 6 மணியாகியிருந்தது. அவன் முகம் கழுவி தியானத்தில் இருந்தான். அவள் எழுந்து அங்கேயே தூங்கியதற்கு தன்னையே கடிந்து கொண்டாள்.

ஒரு சிறிய காகிதத்தை எடுத்து 'எல்லாவற்றிற்கும் நன்றி ராஜ்' என்று எழுதிவிட்டு அங்கிருந்து கிளம்பினாள்.

தியானம் முடித்து எழுந்தவனுக்கு கடுங்கோபம். என்னிடம் ஒரு வார்த்தை சொல்லிவிட்டு போனால் என்ன இவளுக்கு?

சோகமும் துக்கமும் அவன் தொண்டையை அடைத்தது. கோபம் கட்டுக்கடங்காமல் வந்தது. "நான் ஏன் வேறு யாரையாவது காதலிக்க கூடாது? இவளிடம் ஏன் இப்படி அடிமையாக வேண்டும்?"

அவளுடைய அறைக்கு சென்றான். "சிலியா எனும் தாய்க்காக..." விரல்களை அதன் மேல் ஓடவிட்டான்.

அழுகை வந்தது. அழவிரும்பவில்லை அவன். "நான் ஆண். எனக்கு எந்த பலவீனமும் இல்லை. காதல் தோல்விகள் இல்லையா? என்னுடைய காதலும் தோற்றுவிட்டதாக நினைத்துக் கொள்கிறேன். இனி சிலியா பக்கம் தலைவைத்து படுக்க மாட்டேன்".

இப்படி அவன் முடிவு செய்து சில வாரங்கள் ஆகியிருந்தது. ஒவ்வொரு முறையும்

போன் மணி ஒலிக்கும் போது அவளா என்று ஏங்கிய மனதை கண்டித்து அடக்கிக் கொண்டிருந்தான்.

Vivekananda Junior arrives in town - USA Today

எனும் பத்திரிக்கை அவனுக்கு புகழாரம் சூட்டியிருந்தது. அவனுடைய புகைப்படம் கையில் வலது கையில் மைக்குடனும் இடது கை கூட்டத்தை நோக்கியும் உதடுகள் திறந்த வண்ணம் பிரசுரிக்கப்பட்டிருந்தது. அந்த பக்கத்தை எடுத்து மார்போடு அணைத்துக் கொண்டாள் சிலியா.

அன்று அதிகாலை 5.30 மணிக்கு மறுபடியும் ஒரு தொலைபேசி அழைப்பு.

"ஏய் மச்சான் முரளி பேசறேன்டா".

"ஏய் முரளி எப்படிடா இருக்கே?"

"நான் நல்லா இருக்கேன்டா மாப்பிள்ளை. எனக்கு நியூ யார்க்கில் ஒரு டிரெயினிங். இப்ப தான் செய்தி வந்தது. இன்னும் 15 நாள்ல விசா டிக்கெட் எல்லா அரேன்ஜ் ஆயிடும். அங்க இருப்பேன்டா நான். ரொம்ப நாளுக்கு அப்புறம் மீட் பண்றோம்" என்றான் மகிழ்ச்சியுடன்.

"ஆமாம் டா. எத்தனை வாரம் டிரெயினிங்".

"மூனு வாரம்".

"ப்ரவீனாவையும் குழந்தையும் அழைச்சிகிட்டு வாடா".

"கட்டாயம் டா. அவளுக்கு பாஸ்போர்டு பண்ணி வெச்சதிலேர்ந்து எங்கேயும் கூட்டிக்கிட்டு போகலை".

"ஓகேடா. வா பார்ப்போம்".

"சிலியா எப்படி இருக்கா?"

"இருக்காடா! "

"என்னடா விட்டேத்தியா பேசறே?"

"அப்புறம் சொல்றேன்டா".

"டேய். இப்ப சொல்லு".

"சரி நீ இன்னும் மூனு மணி நேரத்தில சாட்லே வா சொல்றேன் என்றுவிட்டு வைத்தான்".

"காமிராவை ஆன் பண்ணுடா முண்டம்" - முரளி.

"வேணான்டா" - ராஜ்.

"ஆன் பண்றா தடியா" - என்றான் முரளி அதட்டலாக.

வெப் காமிராவில் அவன் முகத்தை பார்த்தவனுக்கு ஒரே அதிர்ச்சி. அவன் களை இழந்து காணப்பட்டான்.

"மச்சான் என்னடா ஆச்சு? சொல்லுடா".

நடந்தவைகளை அப்படியே ஒப்பித்தான் ராஜ். அவனுக்கும் யாரிடமோ சொல்ல வேண்டும் போல் இருந்தது.

முரளி அவனை ஆசுவாசப்படுத்தினான். "நான் பேசறேன்டா சிலியாகிட்டே".

"வேண்டாம்" என்று சொல்ல நினைத்தான் ராஜ். அவனால் முடியவில்லை. காதலில் யாருடைய உதவியும் தேடக்கூடாது தான். ஆனால் காதலர் நடுவே ஒரு பணிப்போர் வந்தால் நல்ல மனமுடைய நடுவர், இருவர் மேலும் அக்கறை உடைய ஒருவர், இருவரிடமும் மதிப்பை பெற்ற ஒருவர், பேசினால் பல தடைகள்

அகலும்.

ராஜ்க்கு ஒரு நப்பாசை. முரளி சொன்னால் கேட்பாள் என்று. அவள் ஊரில் நடந்த பல விஷயங்கள் இவனிடம் சொல்லவில்லை. எப்படி சொல்வாள் வந்த உடனே பிரிந்துவிட்டார்களே? முரளி சொல்லித்தான் விமானத்தில் ஏறுவதற்கு முன் கொடுத்த அந்த காகிதத்தை பற்றி தெரியும். முரளியை அண்ணனாக நினைக்கிறாள். அவன் சொன்னால் கேட்பாள்.

மறுபடியும் ஒரு நம்பிக்கை அவனுள் தோன்றியது. அவன் அவனுக்காக விதித்து கொண்ட தடைகள் சுக்கு நூறானது. முரளியின் வரவை ஆவலாக ஏதிர் நோக்கினான். "ஐல் பி தேர் ஃபார் யூ" என்று அவன் நண்பன் ஃபிரண்ட்ஸ் தொடரின் ராகத்தில் பாடியது போல் இருந்தது.

# 4

இரண்டு நாட்களுக்கு பிறகு சிலியாவிடமிருந்து தொலைபேசி அழைப்பு வந்தது.

"என்ன வேண்டும்" என்று வேண்டா வெறுப்பாக கேட்பது போல் கேட்டான்.

"முரளி வர்றான் தெரியுமா?"

"அவன் எனக்கு முதல்ல நண்பன். அப்புறம் தான் உனக்கு அறிமுகம்" என்றான் கடுப்பாக.

"சரி. அவனுக்கு நமக்குள்ளே நடந்தது எல்லாம் தெரியுமா? "

"முந்தாநேத்து அவன்கிட்டே சொன்னேன்".

"ஓ". மௌனமானாள்.

"அதுக்கு என்ன இப்போ!"

"நீ சொல்லியிருக்க கூடாது ராஜ்".

"ஏன்?"

"அவங்க நாம சந்தோஷமாக இருக்கறதா நினைச்சிகிட்டு இருக்காங்க!"

"அதுக்கு நானா காரணம்? நாம ஏன் சேர்ந்து சந்தோஷமா வாழக்கூடாது".

"ராஜ். அவங்க வரும்போது அட்லீஸ்ட் நடிச்சிருக்கலாம். அவங்களை சந்தோஷப்படுத்த".

"எதுக்கு பொய் சொல்லனும். அவன் என் உயிர் நண்பன். அவனுக்கு சொல்லனும் போல் இருந்தது. சொன்னேன். நான் இனிமே யார்கிட்டே பேசினாலும் உன்கிட்டே கேட்கனுமா?"

"சரி விடு. சாயந்திரம் ஃப்ரீயா இருக்கியா? "

"ஏன்?"

"வெளியே போலாமா?"

"நீ கூப்பிடறியா?"

"ஆமாம்".

"நீ நினைச்சா கூப்பிடுவே. நினைச்சா வாரக்கணக்கா பேசமாட்டே. நீ என்ன நினைச்சிகிட்டு இருக்க சிலியா? நீ என் உணர்ச்சிகளோட விளையாடறே!"

"ராஜ். அவங்க வர்றாங்க இல்லை. அவங்களுக்கு சில பொருட்கள் வாங்கனும். அதுக்குத்தான் கேட்கறேன்".

"அதெல்லாம் ஒன்னும் தேவையில்லை".

"ராஜ் ப்ளீஸ். நம்ம பிரச்சனையை கொஞ்சம் தள்ளி வைப்போமா?"

"சிலியா. உனக்கு ஒன்னும் புரியலை. உன்னை பார்த்தா நான் பலவீனமா ஆயிடறேன். உன்னோடு இருந்தா நான் வீக்கா ஃபீல் பண்றேன். நீ என் வாழ்கையிலே வர்றே போறே. உன்னால நான் பல பாதிப்பகளுக்கு ஆளாறேன்".

"ராஜ். எனக்கு எல்லாம் தெரியும் ராஜ். நீ கத்தி சொல்றே. நான் சொல்ல முடியலை. நீ என்னை பார்க்காட்டா பலமாயிடறே இல்லையா? ஆனா நீ என்மேல ஏற்படுத்தின பாதிப்பு இன்னும் 100 வருஷம் இருக்கும். உன்னை பார்க்கறேனோ இல்லையோ".

ராஜ் மௌனமானான்.

"ராஜ் ராஜ்".

"சொல்லு".

"எனக்கு கொஞ்சம் நேரம் வேண்டும் ராஜ். நீ எந்த அளவுக்கு என் மனசிலே நல்ல பாதிப்பை ஏற்படுத்தினியோ அதே அளவுக்கு அன்னிக்கு என் மேலே கெட்ட பாதிப்பை ஏற்படுத்திட்டே. எனக்கு கொஞ்சம் டைம் கொடு".

"எத்தனை நாள் மாசம் வாரம் வருஷம்?"

"தெரியலை".

"சிலியா, என்னை என்ன பைத்தியம்னு நினைச்சியா? உன்னை காதலிச்சதுக்காக நான் பைத்தியமா அலையனுமா?"

"ராஜ். நீ எனக்காக காத்திருக்காதே. வேற பொண்ணை கல்யாணம் செஞ்சிக்கோ".

"அதை நீ சொல்லத் தேவையில்லை சிலியா".

அவள் அழுவது போல் இருந்தது.

குரலை மென்மையாக்கிக் கொண்டு "சிலியா ஐ லவ் யு, பேபி. ஐ ஜஸ்ட் கான்ட் லிவ் வித்அவுட் யூ. டு யூ அன்டர்ஸ்டாண்ட் தட்".

"எனக்கு தெரியும் ராஜ். நீ என்னை நேசிப்பதைவிட நான் உன்னை பல மடங்கு நேசிக்கிறேன்".

"பின்னே நமுக்குள்ளே என்ன தடை ஹனி? உனக்கு திரும்பி வர ஈகோ ப்ராப்ளமா? "

"உன்கிட்டே எனக்கு என்ன ஈகோ ப்ராப்ளம் ராஜ்".

"பின்? நான் உன் காலில் விழுந்து மன்னிப்பு கேட்கட்டுமா? "

"உளராதே ராஜ்".

"பின்னே என்ன ஹனி வேணும் உனக்கு? ஓவ்வொரு நாளும் எனக்கு 1 வருஷம் மாதிரி இருக்கு. உன்னை பார்க்கனும். பார்த்துகிட்டே செத்துப்போயிடனும் சிலியா".

"ராஜ் வேண்டாம் ராஜ் என்னாலை தாங்க முடியலை. நீ போனை வை".
"சாயந்திரம் 6 மணிக்கு பாத் மார்க் வா. நீ வரலைன்னா நான் 15 நிமிஷம் காத்திருந்திட்டு போயிடுவேன்" என்று சொல்லி போனை துண்டித்தாள்.

"சிலியா, சிலியா சே" என்றுவிட்டு போனை தூக்கியெறிந்தான்.

(என்னடா கேட்கறா இவ? ஆண்டவா இன்னும் எத்தனை நாள் இவளுக்காக நான் காத்திருக்கனும்)

6 மணி. சரியாக இருவரும் சந்தித்தார்கள். அவள் ஒரு ஜீன்ஸ் டி-ஷர்ட் அணிந்திருந்தாள். களை இல்லை. அந்த பெரிய புன்னகை இல்லை. நேராக வந்து அவனிடம் "முரளிக்கு ப்ரவீணாவுக்கு குழந்தை ப்ரஜித்துக்கு என்னென்ன வாங்கனும்னு எழுதியிருக்கேன் நீ பாரு" என்று ஒரு காகிதத்தை கொடுத்தாள்.

சோர்ந்துப் போய் காரில் வந்து அமர்ந்தான். அவளும் வந்து அமர்ந்தாள்.

இருவரும் ஏதுவும் பேசவில்லை. பிறகு அவன் பேனா எடுத்து சில உருப்படிகளை அடித்தான்.

"பாக்கியெல்லாம் வாங்கிட்டு வா, நான் வண்டியிலே உட்கார்ந்திருக்கேன்" என்றான்.

"வா ராஜ் ப்ளீஸ். உன் நண்பனுக்கு என்ன பிடிக்கும் என்ன பிடிக்காதுன்னு உனக்கு தானே தெரியும்".

"அவன் தான் உன் அண்ணனாச்சே".

"வா ராஜ்".

"எனக்கு உடம்பு சரியில்லை சிலியா. நீ போ! "

"என்ன உடம்புக்கு" என்று அவன் கழுத்தையும் நெற்றியையும் தொட்டுப் பார்த்தவள் நடுநடுங்கிப் போனாள். அவனுக்கு உடல் கொதித்துக் கொண்டிருந்தது.

"ஓ மை காட். உனக்கு டெம்பரேச்சர். வா டாக்டர்கிட்டே போகலாம்".

"வேண்டாம் சிலியா. எனக்கு பழக்கம் இல்லை. வீட்டுக்குப் போய் மருந்து சாப்பிட்டா சரியாப்போயிடும்".

ஆண் உடல் நலம் சரியில்லாமல் இருந்தால் மட்டுமே பலவீனமாக இருப்பதில்லை. அவன் மனம் சரியில்லாமல் இருந்தால் அவன் மைக் டைசனாக இருந்தாலும் நொடிந்துவிடுகிறான். அப்போது அன்பு காட்ட யாராவது இருந்தால் இன்னும் பலவீனமாகிவிடுகிறான். அந்த நிலையில் தான் இன்று ராஜ் இருந்தான்.

"சரி வா வீட்டுக்கு போகலாம். நாளைக்கு ஷாப்பிங் போறேன் நான்".

"வேண்டாம்" என்றான். அவன் சொன்னது அவன் காதிலேயே விழவில்லை.

வீட்டிற்கு அழைத்து வந்து அவனை படுக்க வைத்தாள். சுடு நீர் வைத்து மருந்து கொடுத்தாள. அதை உண்டு அவன் உறங்கினான்.

அவள் பல மணி நேரம் அவனைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

When this deadlock will become wedlock Mother?

என்று தமிழ் கடவுளிடம் ஆங்கிலத்தில் கேட்டுக் கொண்டிருந்தாள். ஆ. கடவுளுக்கு என்ன மொழிப் பிரச்சனை.

அவளால் அழ முடியவில்லை. அவள் மனம் பதறியிருந்தது. அவனுக்கு ஒரு நாள் கூட உடம்பு சரியில்லாமல் போனதில்லை. அளவான உணவு நல்ல தேகப்பயிற்சி நல்ல குணங்கள் இருந்தது அவனுக்கு. அவனுடைய நட்பிற்கு பிறகு அவள் கற்றுக் கொண்ட முதல் விஷயம் சாதாரண நோய்க்கெல்லாம் மருந்து உட்கொள்ளக் கூடாது என்பது தான். ஒவ்வொருவரின் உடலிலும் எந்த நோயையும் தடுக்கும் சக்தி இருப்பதாக அவன் நம்பினான்.

"இந்த காதல் நோயுக்குமா மருந்து வேண்டாம் ராஜ்" என்று உறங்கிப் போன அவனைப் பார்த்து கேட்டாள்.

You are my medicine darling.

# 5

முரளி குடும்பத்தை அழைத்துக் கொண்டு சவுத் ரிவர் கரைக்கு சென்றனர் அனைவரும்.

கரையின் அருகே ப்ரவீணாவையும் ராஜகோபாலையும் பேசவிட்டு முரளி சிலியாவிடம் சென்றான்.

"சிந்து, இங்கே வா" என்று புல்வெளியில் அமர்ந்து கொண்டு அவளை அருகில் அமர்த்தினான்.

அவளும் யாராவது தன் பிரச்சனையை தீர்த்து வைத்தால் பரவாயில்லை என்று நினைத்தாள்.

"உனக்கு என்ன வயசு? "

"ஏன்" என்பது போல பார்த்தாள்.

"சரி, அதைவிடு".

"உனக்கு கல்யாணம் என்றால் உன் குடும்பத்திலிருந்து யாரை கூப்பிடுவாய்?"

"கிருஷ்ணன், ராஜு, பிறகு நீங்கள்".

"முட்டாளா நீ?"

"ஏன்".

"நாங்கள் தான் உன் கல்யாணத்தை ஏற்பாடு செய்வோம். எங்களுக்கே நீ அழைப்பு கொடுப்பாயா?"

"மன்னிக்கவும். என் நண்பர்களை அழைப்பேன்".

"உன் அம்மா?"

"அம்மாவுக்கு சொல்வேன். அவள் கணவன் அனுமதித்தால வருவாள்".

"உன் அப்பா?"

"அவருடன் தொடர்பே அறுந்துவிட்டது".

"யாருடன் நீ நெருக்கம்?"

"ரீடா, ஜூடி. அவ்வளவுதான்".

"அதற்கு பிறகு?"

"நீங்கள் எல்லாம் தான்".

"நான் சொன்னால் கேட்பியா?"

"ம்".

"உனக்கும் ராஜ்க்கும் என்ன நடந்தது என்று எனக்குத் தெரியும்".

..

"அவன் செய்தது தப்பு தான். மன்னிக்க முடியாத தப்பு தான். அதை சரியென்று சொன்னால் நான் தப்பு".

..

"உன்னை எனக்கு நன்றாக தெரியும். நீ இளகிய மனம் கொண்டவள். உன்னால் வேறொருவனை காதலிக்க முடியாது. சரியா?"

"ஆமாம்".

"ராஜ் வேறு திருமணம் செய்துக் கொள்வான் என்று நீ நினைக்கிறாயா?"

"ம். மாட்டான்".

"அவன் திருமணம் செய்துக் கொள்ளவில்லையென்றால் அவன் அப்பா அம்மா மிகவும் கஷ்டப்படுவார்கள். சரியா?"

"ஆம்".

"அவர்களுக்கும் வயதாகிறது. சரியா?"

"ஆம்".

"நீ அவர்களை உன்னுடைய சொந்த தாய் தந்தையாக நினைக்கிறாய் சரியா?"

"ஆம்".

"அவர்கள் மன வருத்தம் அடைந்தால் பரவாயில்லையா?"

"இல்லை".

"உங்களுக்குள் இந்தப் பிரச்சனை இல்லையென்றால் இந்த திருமணம்

நடந்திருக்கும் அல்லவா?"

"ஆம்".

"அது தான் இல்லை பெண்ணே!"

"நீ வேறு மதம். வேறு நாடு. சாதி. அசைவம். ராஜகோபால் தமிழ் பிராமணன். இந்து. சைவம். உன்னை ஒரு போதும் அவர்கள் ஏற்றிருக்க மாட்டார்கள். ஆனால் உன்னுடைய கடின உழைப்பால் மன உறுதியால் ஒரு இமய மலையை உடைத்திருக்கிறாய். இது பெரிய சாதனை தெரியுமா?"

..

"இப்போது அனைவரும் உங்கள் இருவர் திருமணத்தையே எதிர்பார்த்திருக்கின்றனர். உன் மனம் மாறும். இன்று இல்லாவிட்டாலும் என்றாவது மாறும். நீங்கள் இருவரும் சேர்ந்து வாழ்வீர்கள். சரிதானே?"

"ஆம்".

"நீ வாழ்கை முழுவதும் இப்படியே இருக்கப்போவதில்லையே?"

"இல்லை".

"அவனும் வாழ்கை முழுவதும் இப்படியே இருக்கப்போவதில்லையே?"

"இல்லை".

"ஒரு வேளை உன் மேல் உள்ள காதலால் அவன் தற்கொலை செய்துக் கொண்டால்?"

"இல்லை. ராஜ் அது மாதிரி எதுவும் செய்யமாட்டான்".

"அவனுக்கு உடல் சரியில்லாமல் போனதை இதற்கு முன் பாத்திருக்கிறாயா?"

"இல்லை".

"அவன் எவ்வளவு சோர்ந்து போயிருக்கிறான் தெரியுமா?"

"ஆம்".

"இந்த மனநிலையில் அவன் செத்துப்போனால்…."

"இல்லை. அவன் அப்படி செய்யமாட்டான்".

"செய்யமாட்டானோ செய்வானோ செய்துவிட்டால்….?"

அவள் யோசிக்கத் தொடங்கினாள். யாரும் இதைப்பற்றி அவளிடம் சொல்லவில்லை. அதை பற்றி யோசிக்கவே அஞ்சினாள். கண்களிலிருந்து நீர்துளிகள்.

அவள் கையை தன் கையில் எடுத்துக் கொண்டு முரளி அன்பாக சொன்னான் - "கண்ணா, நீ என் தங்கச்சி தானே? அண்ணா சொன்னா கேட்கனும். நீங்க இரண்டு பேரும் சந்தோஷமா இருந்தா நாங்க எல்லோரும் சந்தோஷமா இருப்போம். நாளைக்கு மாறப்போற மனம் இன்னிக்கே மாறனதா நினைச்சு நீ அவனோடு சேர்ந்திடும்மா. உனக்கும் அவனுக்கும் இது தான் நல்லது".

அவள் அவன் தோளில் சாயந்து அழத் தொடங்கிவிட்டாள். அவளை ஆற்றங்கரையில் தனியே விட்டு ப்ரவீணாவிடம் சென்று கண்களால் ஜாடை காட்டினான்.

ப்ரவீணா சிலியாவின் அருகில் வந்து அமர்ந்தாள். ஒரளவு ஆங்கிலத்தில் "சிந்து, நீ இன்னும் தமிழ் பெண்ணாக மாறவில்லை" என்றாள் தடாலடியாக.

"என்ன? இன்னும் என்ன செய்யவேண்டும்" என்று அழுகை மாறாமல் கேட்டாள்

அந்த அமெரிக்க குழந்தை.

"நான் என்ன சொன்னேன் உனக்கு? நீ சென்னை வந்தப்போ? ஒரு சராசரி பெண் தன் புருஷன் குடிகாரனா புகைப்பிடிக்கிறானா என்று பார்ப்பதில்லை. அவன் தன்னையே நினைக்கிறானா என்று தான் பார்க்கிறாள்? நான் சொன்னது நினைவிருக்கிறதா?"

"ஆம்".

"ராஜ் உன்னை மட்டுமே நினைத்துக் கொண்டிருக்கிறான் சரியா?"

"ஆம்".

"அதில் எந்த சந்தேகமும் இல்லையே".

"இல்லை ப்ரவீணா. அவன் என்னை உயிரளவிற்கு நேசிக்கிறான் என்று எனக்கு தெரியும். ஆனால் என்னை அவன் அன்றிரவு மிருகத் தனமாக கெடுத்துவிட்டான். என் விருப்பம் இல்லாமல். நான் என்னையே தர தயாராக இருந்தேன். ஆனால் இந்த முறையில் அல்ல".

ப்ரவீணா பொறுமையிழந்தாள். பொரிந்து தள்ளினாள்.

"சரி நீ இந்தியப் பெண். தமிழ்ப் பெண். நான் ஒத்துக் கொள்கிறேன். எந்த தமிழ் பெண்ணாவது ஒரு ஆணுடைய அறையில் திருமணதிற்கு படுப்பாளா? நீ எண்ணெய்யை தூண்டிவிட்டு நெருப்பு எரிகிறது என்றால் என்ன நியாயம்? அவன் குடித்திருக்கிறான் என்று தெரிந்தவுடனே நீ உன் அறையில் சென்று படுத்திருக்க வேண்டியது தானே?"

முரளியின் கோணத்தை விட ப்ரவீணாவின் கோணம் தடாலடியாக இருந்தது.

அதிர்ந்து நின்றாள் சிலியா.

"சிந்து, அவனோட பலவாரம் நீ படுத்தே. என்னிக்காவது உன்னுடைய உணர்ச்சிகளுக்கு எதிரா அவன் நடந்தானா?"

"இல்லை".

"அப்போதெல்லாம் அவன் ஏதாவது செய்யமாட்டானா என்று நீ ஏங்கியதுண்டா?"

"ஆம்".

"அப்போதே நீ மனதால் கெட்டுவிட்டாயடி தோழி".

"என்ன?"

"ஆமாம். நீ இல்லாததால் தான் அவன் கோட்பாடுகளை மீறினான். நீ அவனுக்கு சரியான பொருத்தம் இல்லை".

"என்ன?" இது இன்னும் அதிர்ச்சியாக இருந்தது.

"நீ விழுப்புரத்தில் இருக்கும்போது அவன் போன் செய்து இன்றே வந்துவிடு என்று கெஞ்சினான் இல்லையா?"

"ஆமாம்".

"நீ மட்டும் அவனை நிஜமாக அறிந்தவளாக இருந்தால் அவன் மனநிலையை புரிந்து அன்றே ஊருக்கு சென்றிருக்க வேண்டும்".

"அவன் விளையாட்டாக சொன்னான் என்று நினைத்தேன்".

"சிந்து, ஆண்கள் அவ்வளவு சீக்கிரத்தில் அழமாட்டார்கள். அவன் அன்று

உன்னிடம் அழுதான் என்றால் பிரச்சனை எத்தனை பெரியது என்று நீ உணர்ந்திருக்க வேண்டும். நீ எப்படி உணர்வாய். நீ ஒரு அமெரிக்க பெண்மணி. உன் வாழ்கை முறை வேறு. அவன் வாழ்கை முறை வேறு. இதுவே ஒரு இந்தியப் பெண்ணாக இருந்தால் அனைத்தையும் விட்டு அவனிடம் போயிருப்பாள் அன்றே!"

வாயடைத்துப் போனாள் சிலியா.

"ஆம், சிந்து. நீங்கள் கலாச்சாரத்தை மீறிய ஒரு புரட்சி செய்து கொண்டிருக்கிறீர்கள். இதில் இரண்டு புறமும் தவறு நடக்க வாய்ப்பிருக்கிறது. நீ அவனை சந்தித்த சில வாரங்களிலே அவனிடம் வந்து படுத்ததை நினைத்து அவன் உன்னை கற்பிழந்தவள் காரெக்டர் இல்லாதவள் என்று முடிவுக்கு வந்தால் உனக்கு சம்மதமா?"

"ம். இல்லை. கட்டாயம் இல்லை".

"அவன் உன்னை நம்பினான். உன்னை மதித்தான். உன் உணர்வுகளை மதித்தான். நீயும் அவன் உணர்வுகளை மதிப்பவளாக இருந்தால் இந்த விஷயத்தை மறந்து அவனுடன் உன் வாழ்கையை துவக்கு. இதற்கு மேல் நான் ஒன்றும் சொல்லப்போவதில்லை".

ஒரு பெண்ணின் மனது இன்னொரு பெண்ணிற்குத் தான் தெரியும் என்று சும்மாவா சொன்னார்கள்.

ப்ரவீணா வைத்தியம் வேலை செய்ய ஆரம்பித்திருந்தது.

ஒருவேளை அன்றே நான் போயிருந்தால்? ஒரு வேளை அவன் குடித்திருக்கிறான் என்று தெரிந்ததும் என் அறையில் சென்று படுத்திருந்தால்? என்னை சராசரி அமெரிக்க பெண்ணாக அவன் நினைத்திருந்தால்?

ஒருவேளை அவன் தற்கொலை செய்துக் கொண்டால்? இந்த நினைப்பு அவளை வாட்டியது. அதை அவளால் ஏற்றுக் கொள்ளவே முடியவில்லை.

ஓடிச் சென்று முரளி ப்ரவீணாவை கட்டியணைத்தாள். "மிக்க நன்றி" என்று சொல்லிவிட்டு அமைதியாக வண்டியில் ஏறி அமர்ந்தாள்.

# 6

முரளியும் ப்ரவீணாவும் இன்னும் ஒரு முறை சிலியாவைப் பார்த்து பேசியிருந்தால் அவர்களின் திருமணமே நடந்திருந்திருக்கும்.

ஆனால் சிலியா வேலை நிமித்தமாக கலிபோர்னியா போகவேண்டியதாயிற்று.

முரளியும் பயிற்சி முடிந்து ஊர் சென்று விட்டான்.

இரண்டு வாரமாகியும் சிலியாவிடமிருந்து எந்த தகவலும் இல்லை.

சிலியாவின் மனதை மாற்றுவது கடினம் என்று நினைத்தான் ராஜ்.

அப்போது ஒரு நாள் திடீரென்று ஊரிலிருந்து ஒரு தகவல். அம்மா உடல் நிலை சரியில்லாமல் இருக்கிறார் என்று. பதறிப்போய் ஊர் கிளம்பினான்.

க்ரிஸ் விமானதளம் வரை வந்து வழியனுப்பினான். "கவலைபடாதே ஒன்னும் ஆகாது" என்று ஆறுதல் சொன்னான். நாரியும் வந்திருந்தான்.

"கூல் மேன்" என்றான்.

விமானம் கிளம்பும் வரை சிலியாவிடம் சொல்லலாமா வேண்டாமா என்று இரண்டு மனதில் இருந்தான். கிளம்புவதற்கு சில விநாடிகளுக்கு "முன் அம்மாவின் உடல் நிலை சரியில்லை. அவசரமாக ஊருக்கு போகிறேன் - ராஜ்" என்று ஒரு குறுந்தகவல் அனுப்பிவிட்டு தொலைபேசியை அணைத்தான்.

இந்த செய்தி கிடைத்ததும் துடிதுடித்தாள் சிலியா. உடனே ராஜ்க்கு போன் போட்டாள். ஆனால் அவனை தொடர்பு கொள்ள முடியவில்லை. ஒரு வேளை விமானத்தில் ஏறிவிட்டானோ?

உடனே ரீட்டாவுக்கு போன் செய்தாள். அவளும் தன் குழந்தையுடன் வர தயாரானாள்.

3-4 நாட்களில் எல்லா ஏற்பாடுகளையும் செய்து கொண்டு சென்னை வந்து அடைந்தாள். யாருக்கும் தகவல் சொல்லவில்லை. அவளே வாடகை வண்டி அமர்த்தி விழுப்புரம் சென்றடைந்தாள்.

பாரதி நகர் அடைந்த அவள் வெளியில் முரளியின் குவாலிஸ் கிருஷ்ணனின் ஹோண்டா ராஜூவின் டிவிஎஸ் என்று நிற்பதைப்பார்த்து பதறிவிட்டாள்.

திண்ணையில் சுருதி உட்கார்ந்திருந்தாள். அவளுக்கு அருகில் ராஜூவின் மனைவி சுதா. முரளியும் ராஜகோபாலும் ஒரு ஓரத்தில் நின்றிருந்தனர்.

"வாட் ஹாப்பென்ட். வாட் ஹாப்பென்ட் டு ஆன்ட்டி" என்று கதறிக் கொண்டே உள்ளே சென்றாள். பதட்டத்தில் தாய் மொழி வருவது சகஜம் தானே. என்ன தமிழ் படித்திருந்தால் என்ன.

உள்ளே படுக்கையறையில் ராஜகோபாலின் அம்மா படுத்திருந்தார். அவர் அருகில் அவருடைய இடது கையை தன் வலக்கையால் பிடித்தவாறு அவன் தந்தை. சாதாரணமாக வந்த காய்ச்சல் இரண்டு வாரமாக நீடித்துவிட்டதாம். மருத்துவர் இன்னும் 24 மணி நேரம் வரை ஒன்றும் சொல்ல முடியாது என்று சொல்லிவிட்டார்.

நேராக சென்று மாமியின் அருகில் உட்கார்ந்து அவள் வலக்கையை தன் கையில் எடுத்துக் கொண்டாள். மாமாவுக்கு அவளைப் பார்த்ததும் கண்களில் நீர் வழிந்தது.

சுமார் 15 நிமிடங்களுக்கு பிறகு கண்விழித்தாள் மாமி. "கொழந்தே சிந்து வந்துட்டியா நீ".

வலதுபுறம் மருமகள். இடது புறம் கணவன். வேறென்ன வேண்டும் ஒரு பெண்ணுக்கு? உணவைத்தேடும் எலி போல ஒரு பெண் தன் மகனுக்கு பெண் தேடுகிறாள். தன் பராம்பர்யத்தை கட்டிக் காக்கும் ஒரு பெண்ணாக தன் கணவனை மதிக்கும் ஒரு பெண்ணாக தன் மகனை பாதுகாக்கும் ஒரு பெண்ணாக இருக்க வேண்டும் என்பதே இந்த அலைச்சல். அப்படிப்பட்ட பெண் கிடைத்ததும் அவளுக்கு மகன் தேவைப் படுவதில்லை. மகனைக் கூட மருமகள் வழியாக பார்க்கிறாள். இன்று மாமிக்கு அந்த ஒரு நிம்மதி. வெள்ளைக்காரப் பெண்ணாக இருந்தாலும் மேற்படி அனைத்து தகுதியும் சிந்துவிற்கு இருப்பதாக அவள் நம்பினாள்.

மெதுவாக அவள் பேசினாள். இரண்டுவாரம் வெறும் நீராகாரம் தான். பல கிலோ இடை இழந்திருந்தாள்.

"சிந்து, மாமாவுக்கு ரொம்ப மறதி. பேப்பர் படிச்சிட்டே காபி குடிக்க மறந்துடுவார். வேளைக்கு சாப்பிட மாட்டார். அவருக்கு காஸ் டிரபிள் வேற! நீ அவரை நன்னா பார்த்துக்கனும்". என்னமோ ஒரு அதிகாரி வேலைவிட்டு போகும் போது இன்னொரு அதிகாரிக்கு தன் பணிகளை ஒப்படைப்பது போல பேசிக் கொண்டிருந்தார் மாமி.

"அதோ அந்த கதவைத் திற. அந்த மஞ்சள் டப்பாவை எடுத்து வா".

அவர் சொல்படி செய்தாள் சிலியா.

"இதுல நாட்டு மருந்து இருக்கு. உன் மாமாவுக்கு தினமும் தேன்ல கலந்து கொடு என்ன?"

என்னமோ சிலியா வீட்டோடு தங்கிவிட்டதைப் போல வேலைகள் ஒப்படைத்தாள் அந்தத் தாய்.

"இந்த ஆத்தை நீ நன்னா பார்த்துக்கணும். சரியா?"

அவள் சொல்வதற்கெல்லாம் "சரி சரி" என்றாள் சிலியா. அவள் கண்ணில் கண்ணீர் தாரை தாரையாக.

"அழாதடி கொழந்தே! நீ வந்துட்டில்லே. எனக்கு ஒன்னும் ஆகாது" என்று சொல்லிக் கொண்டே மறுபடியும் தூங்கச் சென்றாள்.

சுருதியை முதன் முதலாக பார்த்த ரீட்டாவுக்கு கண்களில் கண்ணீர்.

"ஐயாம் ஸாரி, சுருதி" என்றாள்.

முதுகலை படித்த சுருதி ஆங்கிலத்தில் அழகாக பதில் சொன்னாள் -

"Rita, I know love is indivisible. But definitely it's multipliable".

அவளை கட்டியணைத்து முத்தமிட்டாள் ரீட்டா.

"என்ன பெயர் குழந்தைக்கு" என்று கேட்டாள்.

"ராம்".

"ஓஹோ. சரிதான்".

மொட்டை மாடியில் நண்பர்கள் உறங்க ஒரு படுக்கையறையில் ரீட்டாவும் அவள் குழந்தையும், சுருதி ப்ரவீணா குழந்தை ஒரு படுக்கையறையிலும், சுதா ஹாலிலும் என்று முடிவாயிற்று. மாமா மாமியைவிட்டு அகலவில்லை. சிலியாவும் ஆடை கூட மாற்றாமல் அங்கேயே இருந்தாள்.

நண்பர்கள் பேசிக் கொண்டிருந்தார்கள். பல விஷயங்கள். எப்போதும் கிருஷ்ணன் ஏதாவது பிரச்சனையில் மாட்டிக் கொள்வான். ராஜகோபாலும் தான். முரளி தான் தீர்த்து வைப்பான். ராஜூவின் பேச்சை யாரும் கேட்கமாட்டார்கள். கேலி செய்வார்கள். ஆனால் அவன் அறிவுரைப்படி தான் கடைசியில் எல்லாம்

நடக்கும். சமயோசிதமான அறிவுரைகளை அள்ளி வீசுவான்.

"மச்சான் நாளைக்கு நாம செல்லியம்மன் கோவில் போறோம்டா" என்றான் ராஜூ.

"அம்மா இப்படி இருக்கற நிலைமையில எப்படிடா?" ராஜ்.

"டேய். மருமக வந்திட்டால்ல நாளைக்கு பாரு மாமி எழுந்திரிச்சு உட்கார்ந்துடுவாங்க".

"டேய். முரளி-ப்ரவீணா அவ்வளவு சொன்ன பிறகும் அவ கேட்கலைடா".

"டேய். நாளைக்கு நாம எல்லாரும் போறோம். அவ்வளவுதான்" என்றான் ராஜூ தீர்க்கமாக.

பிறகு கிருஷ்ணனும் ராஜகோபாலும் ஏதோ பேசிக் கொண்டிருந்தார்கள்.

முரளியை மட்டும் தனியாக கூப்பிட்டு ஏதோ கிசுகிசுத்தான் ராஜூ. சரியென்று இருவரும் கிளம்பினர்.

"டேய் எங்கடா போறீங்க?"

"தம் அடிக்க? "

"சரி, போங்க" என்றுவிட்டு உரையாடலை தொடர்ந்தான் கிருஷ்ணன்.

கீழே வந்து சுதாவிடம், "பணம் கொடு" என்று கேட்டான். ராஜூ சம்பள கவரை அப்படியே சுதாவிடம் கொடுத்துவிடும் பழக்கம். மனைவி வேலை செய்யவில்லையென்றால் அவர்கள் தான் வீட்டை நடத்துகிறார்கள் என்ற உணர்வை கொடுக்க பணம் அவசியம். அது மட்டுமல்ல ஒவ்வொரு முறையும் அவளிடம் பணம் பெற்று செல்லும் போது கணவனின் மீது அவளுடைய நம்பிக்கை அதிகரிக்கிறது. பொய்யாக கணக்கு கேட்பதும், என்ன வீண் செலவு

என்று கண்டிப்பதும் அவளுக்கு குடும்பத்துடன் ஒரு பிடிப்பை ஏற்படுத்துகிறது. இது ராஜூவின் தத்துவம்.

சுதாவின் காதில் ஏதோ கிசுகிசுத்தான்.

பிறகு இருவரும் வண்டியை சற்று தூரம் தள்ளிக் கொண்டு வந்து பாண்டி ரோட்டிலிருந்து வண்டியை துவக்கி கண்ணன் தியேட்டர் அருகே உள்ள சிறிய பெட்டிக் கடையில் நிறுத்தினர்.

"இரண்டு கோல்ட் ஃப்ளேக் கிங்ஸ்".

வாங்கி புகைத்துவிட்டு நேராக பெரிய கடைவீதி தெருவுக்கு சென்று சீத்தாராம் தியேட்டருக்கு அருகில் உள்ள பூக்கடையில் நிறுத்தினான்.

அங்கே கடைக்காரருக்கு பணம் கொடுத்து ஏதோ விவரங்களை கூறினான்.

# 7

காலையில் மாமா கண்விழித்து பார்த்த போது மாமி இல்லை. சிலியாவும் உட்கார்ந்தபடியே தூங்கியிருந்தாள். அவளை எழுப்பி
"வேர் இஸ் மாமி" என்று கேட்டார்.

மாமி குளித்து முடித்து துளசிக்கு பூஜை செய்துக் கொண்டிருந்தாள்.

மாடியிலிருந்து கீழே பார்த்த ராஜகோபால், "அம்மா எப்படி இருக்கே?" என்று கேட்டான்.

"நான் நல்லா இருக்கேன்டா".

"அம்மா எங்களை எல்லாம் இப்படி பயப்படுத்திட்டியே?"

"டேய், பகவான் இருக்கான்டா. எதுக்கு பயம். சீக்கிரம் கீழே இறங்கி வா. கோவிலுக்கு போலாம்" என்றாள்.

ராஜூ சுதா முரளி ப்ரவீணா சுருதி என்று அனைவரும் தயாராக இருந்தனர். மனோரமா ஓட்டலிலிருந்து அனைவருக்கும் இட்லி சாம்பார் பொங்கல் முரளி ஸ்பான்ஸர்.

மனைவியை இப்படி பார்த்த மாமாவுக்கு ஒரு பெரிய பலம்.

"எல்லாரும் கிளம்புங்க" என்ற அனைவரையும் அவசரப்படுத்தி குளிப்பாட்டி

தயார் செய்தார் மாமா. மிலிட்டரி மேன் இல்லையா? எல்லாம் முறைப்படி நடக்கவேண்டாமா?

குவாலிஸ் என்றால் குவாலிஸ்தான். இன்னும் எத்தனை பேர் வந்தாலும் ஏற்றிச் செல்லும்.

முரளி வண்டி ஓட்ட அவனருகில் ராஜகோபால் ராஜ் கிருஷ்ணன் என்று நண்பர்கள் பட்டாளம். பின்னால் இருக்கையில் சிலியா சிவப்பு பட்டுப்புடவையில் மாமா மாமியுடன். எதிர்எதிரே இருக்கும் கடைசி சீட்டில் ஒரு புறம் ரீட்டா தன் குழந்தை ப்ரஜித் அருகில் சுதாவும் ப்ரவீணாவும் சுருதியுடன்.

நேராக சீத்தாராம் தியேட்டரின் அருகில் நின்றது வண்டி. ராஜகோபால் "என்ன என்ன" என்று கேட்டான்.

முரளி, "சாமிக்கு பூ" என்றான்.
பூக்காரரோ பெரிய பொட்டலங்களை வண்டியின் மேல் இருந்த லக்கேஜ் காரியரில் போட்டார்.

வண்டி நேராக செல்லியம்மன் கோவில் முன் நின்றது.

அனைவரும் குடும்பத்துடன் தரிசனம் செய்தனர். அம்மன் இன்று அன்புருவாய் காட்சியளித்தாள். அழகான மஞ்சள் பட்டுச் சேலை. புதிதாக பறித்த வேப்பிலை. எலும்பிச்சை பழம். பெரிய குங்குமம். இந்த கண்கொள்ளா காட்சியை அனைவரும் அருகில் நின்று மெய்மறந்து ரசித்துக் கொண்டிருந்தனர்.

அப்போது சுருதியும் சுதாவும் ஆளுக்கு ஒரு மாலை எடுத்து வந்து ராஜகோபாலிடம் ஒன்றும் சிலியாவிடம் ஒன்றும் கொடுத்தனர்.

சுருதி ராஜகோபாலிடம் "இம் அவங்களுக்கு மாலை போடுங்க" என்றாள்.

"என்ன?"

"ஆமாம். இன்னிக்கு உங்களுக்கு கல்யாணம்? "

"என்ன?" என்றான் ராஜ் குழப்பத்துடன்.

"ஆமாம்பா எங்களுக்கு காலையிலேயே ராஜூவும் முரளியும் சொல்லிட்டாங்க. கோ அஹெட்" என்றார் அப்பா.

"சிந்து, அவன் பயப்படறான். நீ போடு மாலையை" என்றாள் அம்மா.

சிலியா திகைத்து நின்றிருந்தாள்.

ராஜ் பயத்துடன் அவளைப் பார்த்து "போடட்டுமா" என்ற பார்வையைப் பார்த்தான. அவள் கண்களை அசைத்து சம்மதம் தெரிவித்தாள்.

அவன் அவளுக்கு மாலையிட்டான். சிந்துவும் அவனுக்கு மாலையிட்டாள்.

ராஜூ தன் கையில் வைத்திருந்த மஞ்சள் கயிறை பூசாரியிடம் கொடுத்து "இதை அம்மன் காலடியில் வைத்துக் கொடுங்க" என்று சொல்ல அவரும் அப்படியே செய்தார்.

ராஜகோபால் அதை பயபக்தியுடன் எடுத்து அவள் கழுத்தில் கட்டினான். அவன் திணறிப்போயிருந்தான். அம்மாவின் உடல் நன்றாக ஆனதும் அம்மனின் அருள் கிடைத்ததும் அவனை திக்குமுக்காட செய்திருந்தன.

ராஜூவை முதலில் இறுக அணைத்தான். "தாங்க் யூ டா" என்றான். "டேய் உதைபடுவே" என்றான் ராஜூ பதிலுக்கு.

பிறகு முரளியையும் கிருஷ்ணனையும் அணைத்து "தாங்க்ஸ்" என்றான்.

பிறகு இருவரும் மாமா மாமியின் காலடியில் விழுந்து ஆசிகள் பெற்றனர்.

"அம்மன் காலடியில் விழுங்க கொழந்தகளா" என்றனர் பெரியோர்.

ராஜகோபாலும் சிந்துவும் நெடுஞ்சாண்கிடையாக அம்மனை விழுந்து வணங்கினார்கள். சிந்துவின் கண்களில் தாரைதாரையாக தடையின்றி நீர் கொட்டியது. "தாங்க் யூ மதர்" என்றாள் பல முறை.

'கவலைப்படாதே சகோதரா எங்கம்மா கருமாரி காத்து நிப்பா
காதலத்தான் சேர்த்து வைப்பா கவலைப்படாதே சகோதரா' என்று தேவா வானோலியின் ஏதோ ஒரு அலைவரிசையிலிருந்து பாடிக் கொண்டிருந்தார்.

கையிலிருந்த சிறு காகிதத்தை எடுத்து ராஜிடம் சிந்து காட்டினாள். "இது தான் அம்மனிடம் எனது அடுத்த கோரிக்கை" என்று சொன்னாள்.

"என்ன, குழந்தை வேண்டும்னா?" என்று கேட்டபடியே அதை வாங்கி பிரித்து படித்தான்.

"அம்மா நான் சாகும்போது சுமங்கலியாக சாகவேண்டும்" என்று எழுதியிருந்தது.

மிகவும் நெகிழ்ந்து போய் அங்கே அவளை இறுக அணைத்தான். ஆனால் அவளை உண்டியலில் போடவிடாமல் தடுக்க முயன்றான். அவள் அவனுடைய கைகளை அகற்றிவிட்டு அந்த வேண்டுதலை உண்டியலில் போட்டாள்.

அம்மன் புன்னகையுடன் பார்த்தாள். கடல் போன்ற அன்பை தன்னுள் வைத்து வருபவர்களையெல்லாம் நலமாக்கி வளமாக்கி ஆசி புரியும் அம்மா அன்று ஒரு அமெரிக்க பெண்ணின் மனமாற வேண்டுதலையும் நிறைவேற்றி வைத்தாள்.

'உன் கோரிக்கை கேட்டவுடன் அம்மன் மனதுக்குள்ளே சிரிப்பாள்
இந்த குழந்தை கேட்டதை ஓடோடி கொண்டு வந்து தருவாள்"

செல்லியம்மன் சிலையாகவில்லை. அப்படிச் சிலையானாலும் அவள் செவிடாவதில்லை.

**முற்றும்**



**மோகன் கிருட்டிணமூர்த்தியின் பிற படைப்புகள்:**

1. மேற்கே செல்லும் விமானம் – 4 பாகங்கள்
2. கடைசி பேட்டி
3. மெல்லக் கொல்வேன்
4. என் கை பிடித்தவன்
5. போதாதெனும் மனம்
6. கறுப்பு வரலாறு
7. ரிதுவேந்தர்
8. கணினிக் காதல்
9. நேற்றைய கல்லறை
10. இன்னும் பெயர் வைக்கவில்லை
11. காதல் இல்லையேல் காதல்
12. Westbound Flight (மேற்கே செல்லும் விமானம் மொழி பெயர்ப்பு)
13. Influences of Unknown Factors on Mankind

இவற்றை நீங்கள் கீழ்கண்ட தளங்களில் காணலாம்

1. Google Books
2. Apple iBooks
3. Amazon Kindle

உங்கள் கருத்துக்களை leomohan@yahoo.com எனும் முகவரிக்கு எழுதி அனுப்புங்கள். நன்றி.

Also subscribe to www.youtube.com/leomohan for Video Series in Tamil. Stock Market Training, Corporate World Challenges and 5-Minute Videos are the topics currently available. Visit www.soundcloud.com/leomohan or www.shoutengine.com for Tamil Audio podcasts.